**ஹப்புதளை நகர சபை**
**பதுளை மாவட்டம்**
---------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 22 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன் , அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, ஹப்புத்தளை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 62,851 தொகைக்கான ஊழியர் பிணை வைப்புக்கள் பொறுப்புகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு உள்நாட்டு கடன்கள் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த கடனின் பெறுமதி ரூபா 14,681,621 தொகையாக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 15,164,017 தொகை என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் பொறுப்புகள் ரூபா 482,396 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புகள் முதலீட்டு வட்டி ரூபா 1,131,958 தொகை எனினும், அதனை ரூபா 992,886 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் வட்டி வருமானம் ரூபா 139,072 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 246,200 தொகை பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டியில் கணக்கீடு செய்திருக்காமையால் நடைமுறை சொத்துக்கள் அப்பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 13,319,106 தொகைக்கான பெற வேண்டிய கணக்கு மீதியில் 29 வருட கால நடந்திருந்த நிலுவை வீதவரி உற்பட ரூபா 429,308 தொகை 29 வருட காலம் கடந்துள்ள நிலுவை ஏனைய வருமானங்கள் உட்பட ரூபா 12,855,822 தொகை 03 வருட காலம் கடந்துள்ளன மதிப்பளிக்கப்படாத காசோலைகள் ரூபா 33,976 தொகை அடங்கியிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 29 வருட காலம் கடந்துள்ள செலவு கடன் கொடுத்தோர்கள் ரூபா 2,173,846 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 33,976 தொகைக்கான கணக்கு விடயம் ஒன்றினை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுதி செய்ய முடியாதிருந்தது.

**1.3.4 இணக்கமின்மைகள்**

**1.3.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் , பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களும் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவை | | |
| (i) நிதிப் பிரமாணம் 189,486 | 33,976 | 05 மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பான பணம் 14 ஆண்டுகள் முதல் அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 371 | 283,643 | 16 சந்தர்பங்களில் செலுத்தப்பட்டிருந்த முற்பணங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம 571 | 427,811 | காலம் கடந்த 9 வைப்புக்கள் தொடர்பாக ஆதனவளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொதுநிருவாக சுற்றறிக்கை | | 10 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | | உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல்களை உறுதிப்படுத்துவதற்காக விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | 2002 திசெம்பர் 28 ஆம் திகதிய IAI/202/02 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை | | கணினிகள் மற்றும் கணினி துணைக் கருவிகள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 செப்டம்பர் 18 ஆம் திகதிய PF 437 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை. | 586,514 | 12 வாகனங்களுக்கான காப்புறுதி மேவகை காப்புறுதி முகவர்களின் மூலம் பெறப்பட்டிருந்தது. |
| (ஊ) | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1986 ஏப்ரல் 01 ஆம் திகதிய 890 ஆம் இலக்க சுற்றறிக்கை | | சபைக்கு சொந்தமான பதுளை வீதியில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தல இலக்கம் 01 மற்றும் 02 இற்கு 2017 ஆண்டிற்காக சிக்கன வாடகை பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது நகர சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 8,135,460 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,629,876 தெகை ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம் , சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் , சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரித்த வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரித்த வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 1,883,484 | 1.843,076 | 1,879,076 | - | 1,868,100 | 1,837,533 | 1,806,410 | 31,123 |
| (ii) வாடகை | 12,611,619 | 6,952,528 | 11,347,817 | - | 8,868,300 | 7,716,635 | 9,555,957 | - |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 805,300 | - | 998,287 | - | 837,200 | - | 1,000,284 | - |
| (iv) ஏனைய வருமானங்கள் | 2,343,600 | - | 4,408,587 | - | 2,615,700 | - | 2,166,543 | - |
| மொத்தம் | 17,644,003 | 8,795,604 | 18,633,767 | - | 14,189,300 | 9,554,168 | 14,529,194 | 31,123 |
| | ======== | ======== | ======== | | ========= | ========= | ========= | ======== |

### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 8.7 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 18.6 மில்லியன் தொகையாக காணப்பட்டது. சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முன்னைய ஆண்டிற்கான நிலுவை பெறுவனவுகளும் அடங்கியிருந்தது.

### 2.2.3 வீத வரி மற்றும் வரியும்

முன்னைய ஆண்டிலிருந்து முன் கொண்டு வரப்பட்டுக் காணப்படும் நிலுவை நீர் வரி ரூபா 31,123 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

சபைக்குச் சொந்தமான மீன் கடை மாதாந்தம் ரூபா 55,317 இற்கு வாடகைக்கு கொடுத்திருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் தவணைப் பணம் அறவீடு வாடகைக்கு கொடுத்த முதல் மாதத்தில் இருந்து நடைபெற்றிருக்காமையால் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு ரூபா 169,949 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இறைச்சி மற்றும் மீன் கடை டென்டர் வருமானம் சேகரித்தல் இரண்டு சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

(ஆ) பஸ் நிலைய கழிவறையின் 2017 ஆண்டிற்காக ரூபா 26,417 இற்கான மாதாந்த கட்டணம் ஒன்றிற்காக வாடகைக்கு கொடுத்திருந்ததுடன், 2017 ஜுன் மாதத்தின் பின்னர் உரிய முறையில் மாதாந்த வாடகை அறவீடு செய்திருக்கவில்லை. அதன் பிரகாரம்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 167,087 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) சபையின் அதிகார பிரதேசத்தில் நிறுவப்படும் விளம்பர அறிவித்தல் பலகைகளில் இருந்து ஒரு சதுர அடிக்கு ரூபா 100 தொகை அறவிடப்பட வேண்டுமெனினும், 04 அறிவித்தல் பலகைகளிலிருந்து 2017 ஆண்டு தொடர்பாக ரூபா 141,000 தொகை அறவீடு செய்திருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 183,329 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 778,943 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

நகரசபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுபயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு , வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

**(அ) மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் சம்பளம்.**

2017 ஏப்ரல் முதல் திசெம்பர் வரையான விடுமுறை நாட்களில் கடமையாற்றியதற்காக நிறைவேற்றப்பட்ட கடமைகளை குறிப்பிடாமல் இருந்த போதிலும் சபையின் பதவியணியினருக்கு ரூபா 213,908 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) விடுமுறை நாட்களில் கடமையாற்றுவதற்காக பூர்வாங்க அங்கீகாரம்**

2013 அக்தோபர் 07 ஆம் திகதி பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 21/2013 (ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் பூர்வாங்க அங்கீகாரத்துடன் ஒரு மாதத்தில் கூடிய அளவு இரண்டு நாட்கள் சேவை ஆற்ற முடியும் அத்துடன் 02 நாட்களை விட கூடுதலாக கடமையாற்றியிருந்த சந்தர்பங்களில் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

**(இ) அங்கீகாரம் இன்றிய நிர்மாண வேலைகள்**

(i) 1988 நகரசபை கட்டளை சட்டத்தின் அதிகாரம் 255 பிரிவுகள் 72,73 மற்றும் 74 இற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்த 11 நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ii) சபையின் அங்கீகாரம் இன்றி ஹபுத்தளையில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் மூன்றாம் மாடி மற்றும் வெலிமடையில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் இரண்டாவது மாடிகளின் மற்றும் மூன்றாவது மாடிகளின் நிர்மாண வேலைகள் நடைபெறுவது 2017 செப்டம்பர் 11 திகதி மேற்கொள்ளப்பட்ட வெளி பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட போதிலும், அங்கிகாரம் இன்றிய நிர்மாண வேலைகளை அகற்றுவதற்கு நகர சபையினால் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(iii) அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த மொத்த சந்தையின் 22 ஆம் இலக்க கடையை அடுத்து அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தை நகர சபை கட்டளை சட்டத்தின் பிரிவு 72(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உடைத்து அகற்றியிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

**(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 11 வெற்றிடங்களும் 02 மிகைகளும் காணப்பட்டன.

**(ஆ) பதவியணிக் கடன்**

சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் இறந்துள்ள 19 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 50,422 தொகை அறவீடு செய்திருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு திறமையின்மை

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடை வாடகை பெறுமதி மதிப்பீடு தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 வாகன திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமை

2017 ஜுன் 30 திகதி அளவிலும் செயற்படாது காணப்பட்ட சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனம் ஒன்றை திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.5.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

பாதை தகர்க்கும் இயந்திரம் ஒன்று 2002 ஆண்டு முதல் பயன்படுத்த முடியாத நிலைமை அடைந்திருந்ததுடன் அவ் இயந்திரத்தை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகை திட்டம்

2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 4 ஆவது அத்தியாயத்தில் 4.2 ஆம் வழிகாட்டல் பிரகாரம் வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் வருமானங்கள் மற்றும் செலவுகளை உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கம் செய்த போது 06 வருமான விடயங்களில் முரண்கள் 10 சதவீதம் முதல் 256 சதவீதம் வரையான வீச்சிலான முரண்கள் மற்றும் 07 செலவு விடயங்களில் 04 சதவீதம் முதல் 39 சதவீதம் வரையான வீச்சிலான முரண்களும் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2017 ஆண்டிற்காக போதியளவு உள்ளகக்கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

மீளாய்வண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் போதியளவு நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | குறைபாடு |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) கணக்கு மீதிகள் அட்டவணைகளுடன் இணங்காமை. |
| | | (ii) நடைமுறை அல்லாத சொத்துக்கள் நிதிக் கூற்றுகளில் இருந்து கைவிடப்படல் மற்றும் குறைவாகக் காட்டுதல். |
| (ஆ) | வருமான நிருவாகம் | (i) நிலுவை வருமான அறவீடு செய்வதில் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்படல். |
| (இ) | நிலையான சொத்துக்கள் | (i) சபைக்கு செந்தமான காணிகள் கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்யாமை. |
| | | (ii) சொத்துக்களை வகைப்படுத்தாமை. |
| (ஈ) | இருப்பு கட்டுபாடு | (i) இருப்பு பதிவேடு முறைப் பிரகாரம் பேணப்பட்டிருக்காமை |